**<u>In the Court of the District Munsif, Eraniel</u>**

**Original Suit No. 34/2008** **Date:29.01.2026.**

**(DW1)-** லட்சுமி

<u>**வாதி** தரப்பு குறுக்கு விசாரணை</u>

1. நான் கூடுதலாக தாக்கல் செய்துள்ள பி.வா.ச.ஆ.23 முதல் 28 ஆவணங்கள் குறித்து அனைத்து சங்கதிகள் எனக்கு தெரியும் என்றாலும், அது குறித்து அனைத்து கேள்விகளுக்கும் என்னால் பதில் அளிக்க முடியும் என்றால் சரிதான். பி.வா.ச.ஆ 27 ஆவணம் எனக்கு எவ்வாறு கிடைத்தது என்றால் எனது வீட்டில் இருந்தது நான் தான் வழக்கறிஞரிடம் கொடுத்தேன். வழக்கு தாக்கல் செய்யும் சமயத்திலும் என்னிடம் தான் மேற்படி ஆவணங்கள் இருந்தது என்றால் எனது தாயர் வைத்திருந்தார் நான் அதை பார்க்கவில்லை. மேற்படி பி.சா.சா.ஆ.27 ஆவணம் பிரச்சுரம் செய்யப்படும் போது எனது அம்மா உயிருடன் இருந்தார என்றால் உயிருடன் இருந்தார். பி.வா.சா.ஆ.27 ஆவணத்தில் குறிப்பிட்டுள்ள விவரங்கள் முற்றிலும் உண்மையானதா என்றால் உண்மையானது தான். அதில் குறிப்பிட்டுள்ள படி இரண்டு வழக்குகளில் உள்ள சொத்துகள் எனக்கும் எனது சகோதர, சகோதரிகளுக்கும் அவகாசப்பட்டதாகும் என்று குறிப்பிட்டுள்ள விவரம் உண்மையானதா என்றால் உண்மையானதுதான். எனக்கும் சகோதரா சகோதரிகளுக்கும் உரிமைபட்ட சொத்தை பொறுத்து நான் மட்டும் ஏன் விளம்பரம் செய்துள்ளேன் என்றால் எனக்கு உரிமைப்பட்ட சொத்து என்பதாலும் அதை விற்பனை செய்துவிட கூடாது என்பதற்காகவும் விளம்பரம் கொடுத்தேன்.

2. பி.வா.சா.ஆ.27 ஆவணம் படி எனக்கு பட்டிகை சொத்தில் தனிப்பட்ட உரிமை இருப்பதாக குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல, உரிமை உண்டு. நான் சட்டதிற்கு புறம்பாக போலியான உயில் உற்பத்தி செய்திருந்த காரணத்தினால் தான் அவ்வாறு மேற்படி விளம்பரத்தில் குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல. எனக்கு உயில் எழுதப்பட்டு எத்தனை வருடங்கள் கழிந்து மேற்டி அறிவிப்பு கொடுக்கப்பட்டது என்றால் 5 வருடம் கழித்து கொடுத்தேன். மேற்படி பி.வா.சா.ஆ. 27 அறிவிப்பை விளம்பரம் செய்வதற்கு யார் பணம் கொடுத்தார்கள் என்றால் நான் பணம் கொடுத்து எனது வழக்கறிஞரால் விளம்பரம் செய்யப்பட்டது.

3. பி.வா.சா.ஆ.27 விளம்பரத்திற்கு முன்பு நான் தாவா சொத்திற்கு கரம் கட்டி உள்ளளேனா என்றால் நான் 2011 ஆம் வருடம் வரி கட்டி உள்ளேன். வழக்கு நிலுவையில்

இருக்கும்போது தான் வரி செலுத்தப்பட்டது என்றால் சரிதான். என் பெயரில் வரி செலுத்துவதற்கு எனது தாயார் உதவி செய்தாரா என்றால் செய்தார். எனது அம்மாவின் உதவியோடுதான் பட்டாவையும் நான் பெற்றேன் என்றால் சரிதான். நான் தாக்கல் செய்து உள்ள பி.வா.சா.ஆ. 23 ஆவணம் எனக்கு எவ்வாறு கிடைத்தது என்றால் எனது அம்மாவின் கைவசத்தில் இருந்து தற்போது எனக்கு கிடைத்தது.

4. எனது அம்மா எனக்கு நேரடியாக மேற்படி ஆவணத்தை கொடுக்கவில்லை என்றால் சரிதான், பெட்டியில் வைத்து பூட்டி வைத்திருந்தார்கள் அதை உடைத்து பார்த்தபோது கிடைத்தது. மேற்படி பெட்டி எனது அம்மா இறந்த பின்பு எப்போது உடைக்கப்பட்டது என்றால் தற்போது தான் உடைக்கப்பட்டது. மேற்படி பெட்டி யாருடைய கைவச அனுபவத்தில் இருந்தது என்றால் எனது அப்பா அம்மா அறையில் வைத்து இருந்தோம். நான் குறிப்பிடும் அறையானது எந்த வீட்டில் உள்ளது என்றால் கதவு எண் 5/61H வீட்டில் உள்ளது. மேற்படி பெட்டி யாரால் உடைத்து எடுக்கப்பட்டது என்றால் எனது அண்ணன் மற்றும் என்னால் உடைக்கப்பட்டது.

5. நான் குறிப்பிடும் பெட்டியில் தான் உயிலும் இருந்தது என்றால் சரியல்ல. எனது அம்மாவிற்கு எத்தனை பெட்டிகள் உள்ளது என்றால் ஒரே பெட்டி தான் இருந்தது. நான் எனது அம்மாவின் நகைகளை எடுத்துவிட்டார்கள் என்று குறிப்பிடும் பெட்டியும் ஒரே பெட்டி என்றால் சரியல்ல, அது வேறு பெட்டியாகும். மேற்படி நகை இருந்த பெட்டி எங்கு இருந்தது என்றால் எனது அண்ணன் வீட்டில் இருந்தது. நகைகள் காணாமல் போனதை கண்டுபிடித்தபோது நான் தாக்கல் செய்துள்ள மேற்படி பி.வா.சா.ஆ.23 ஆவணத்தை கண்டுபிடிக்கவில்லை என்றால் சரிதான். நான் மேலே குறிப்பிட்டுள்ள சங்கதிகள் அனைத்தும் பொய் என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ.24 ஆவணமும் பெட்டிகுள் தான் இருந்ததா என்றால் பெட்டியினுள் இல்லை என்னிடம் இருந்தது.

6. நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் சட்டத்திற்கு புறம்பாக உற்பத்தி செய்துள்ள ஆவணங்கள் என்றாலும் மேற்படி ஆவணங்கள் வழக்கு பட்டிகை சொத்தை அபகரிக்க வேண்டும் என்ற என்ற எண்ணதில் தாக்கல் செய்ப்பட்டுள்ள ஆவணங்கள் என்றாலும் சரியல்ல.

(2 ம் வாதி மேற்படி குறுக்கு விசாரணையை தனது தரப்பு குறுக்கு விசாரணையாக ஏற்றுக்கொள்வதாக குறிப்பிட்டார்.)